முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1261

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

13.03.2023,திங்கட்கிழமை

1. அறமெனும் வேலி கொண்ட ஐயனே வாழ்க
ஆற்றல்மிக்க வரம்பெற்ற தேசிகனே வாழ்க
வரம்பல உலகோர்க்கு தந்தருளி
வாழவைக்கும் குருராஜனே ஞானியே வாழ்கவாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும்
வழங்குவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் மாசி மாதம் 29 ம் நாள், 13.03.2023, திங்கட்கிழமை)
தாழ்வில்லா அரங்கனின் சன்மார்க்கமே
தரணியெங்கும் வலம்வந்து உலகைமாற்றும்
3. மாற்றுமப்பா அரங்கன் மாதர்மமே மக்களையெல்லாம் பசிபிணியிலிருந்து விரட்டி
ஆக்கமுடன் ஞானமார்க்கத்தை காட்டி அனைவருக்கும் அழியாமை தந்தருளும்
அருளுகின்ற அரங்கன் தயவே உயர்மார்க்கமாகும்
ஆற்றலாக வந்த அரங்கன் அவதாரமே உலகமாற்றமாகும்
4. ஆகவே உலகோர் அரங்கன் திருவடி பற்றி
ஐயனே என முழுமைபட சரணாகதி
வகைபட ஏற்று அரங்கனை தொடர்ந்து
வள்ளல் தன்மையை உலகமெங்கும் நிரப்பி இனிதே
5. இனிதே உலகோர் தொண்டாற்றிவர
இவர்களெல்லாம் அரங்கன் தேடல்வழி
கனிவேலவன் என் ஆசியோடு ஞானிகளாக
கலியுகத்தில் சிறந்து உலகமாற்றத்தை
6. மாற்றத்தை அரங்கன் வழிவழி
மக்களெல்லாம் இலகுவாய் செய்துமுடித்து
ஆற்றல்பட ஞான ஆட்சிக்காலத்தை
அரங்கன் ஆசிபட ஆறுமுகன் யான் வெளிப்பட
7. வெளிப்பட நடத்தி உலகோரெல்லாம்
விரைந்து பாதுகாப்புமிக்க வாழ்வாக
அழியாமை பெற்று உலகோர் சிறப்பர்
ஆனந்தமான ஞானலோகம் படைத்து அரங்கன்வழி மகிழ்வர்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–